11.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## வேலூர் கோட்டையை மொய்க்கும் பனை வெல்ல விவசாயிகள்



வேலூர் கோட்டை வட்டச் சாலை உள்பட நகரின் பல இடங்களில் சாலையோரம் பனை வெல்லம், இஞ்சி கருப்பட்டி விற்பனையை தென்மாவட்ட விவசாயிகள் கடந்த சில தினங்களாகச் செய்து வருகின்றனர். திருச்செந்தூர், உடன்குடியைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்டவர்கள் லாரிகளில் பனை வெல்லம், சில்லுக் கருப்பட்டி என அழைக்கப்படும் இஞ்சிக் கருப்பட்டி ஆகியவற்றை பெருமளவில் கொண்டுவந்து, கிலோ கணக்கில் விற்பனை செய்து வருகின்றனர். இஞ்சி கருப்பட்டி கிலோ ரூ. 200-க்கும், பனை வெல்லம் ரூ. 130-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கோட்டை சுற்றுச் சாலையில் வெல்ல விற்பனையில் ஈடுபட்டுள்ள உடன்குடி கொம்பையாவைக் கேட்டபோது அவர் கூறியது: சென்னையில் கடந்த 3 மாதங்களாக முகாமிட்டு சில்லுக் கருப்பட்டி, பனை வெல்லம் ஆகியவற்றை விற்பனை செய்து வந்தோம். அதைத் தொடர்ந்து வேலூர் நகரில் முகாமிட்டுள்ளோம். இங்கு ஒரு மாத காலத்துக்கு விற்பனை செய்வோம் என்றார். வேலூர் நகரில் நாட்டு மருந்துக் கடைகளில் இந்தப் பொருள்கள் ஏற்கெனவே கிடைக்கும் நிலையில், நீங்கள் இங்கு விற்பனையில் சாதிக்க முடியுமா என்று கேட்டபோது, "இவற்றின் பயன்கள் பற்றி பெரும்பாலான வட மாவட்டத்தினருக்குத் தெரிய வாய்ப்பில்லை. நாங்கள் ஆங்காங்கே கடை வைத்துள்ளதைப் பார்த்து விசாரிக்க வருவோரிடம் இவற்றின் பயன்களை

எடுத்துக் கூறுகிறோம். அத்துடன் வெளியில் வாங்கும் விலையைக் காட்டிலும் மிகக் குறைந்த விலைக்கு நாங்கள் தருவதை அறியும் பலர் கிலோ கணக்கில் வாங்கிச் செல்கின்றனர்' என்றார்.

**மருத்துவக் குணம் மிக்கது**

பனங் கருப்பட்டி என அழைககப்படும் பனை வெல்லத்தில் இரும்பு, கால்சியம் சத்து அதிகமாக உள்ளது. இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. வைட்டமின் "பி', அமினோ அமிலங்கள் நிறைந்துள்ள பனை வெல்லம் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகிறது. பருவம் அடைந்த பெண்களுக்கு கருப்பட்டியையும், உளுந்தையும் சேர்த்து உளுந்தங்களி செய்து கொடுத்தால் கருப்பை ஆரோக்கியமாக வளரும். இதில் நார்ச்சத்தும் அதிகம். குப்பைமேனிக் கீரையுடன் கருப்பட்டியைச் சேர்த்து வதக்கிச் சாப்பிட்டால் வறட்டு இருமல், நாள்பட்ட சளித் தொல்லை நீங்கும். சில்லுக் கருப்பட்டியை பனை வெல்லம், இஞ்சி, பெருஞ்சீரகம், ஏலக்காய் ஆகியவற்றைக் கலந்து தயாரிக்கிறோம். காபி சாப்பிடுபவர்கள் சர்க்கரைக்கு பதிலாக இதைப் பயன்படுத்தலாம். கருப்பட்டியின் பயனைத் தெரிந்துகொண்டால் அதை யாரும் பயன்படுத்தாமல் இருக்க மாட்டார்கள் என்கிறார் கொம்பையா.

**<u>தேங்காய் மட்டை மஞ்சியில் இருந்து தயாரிக்கும் கயிறுக்கு மவுசு</u>**



பழனியருகே மஞ்சியைக் கொண்டு தயாரிக்கப்படும் கயிறுக்கு கேரளாவில் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் விற்பனை சூடுபிடித்துள்ளது. தென்னை மரத்தில் கிடைக்கும் அனைத்து பொருட்களும் பல்வேறு வகையில் மனிதனுக்கு பயன்படுகிறது. தேங்காய் சமையலுக்கும், இளநீர் உடல் சூட்டைத் தணிப்பதற்கும் உதவுகிறது. தென்னை மரத்தின் பாளை விசேஷ வீடுகளில் கட்டவும், தோகைகள் கூரைக்கும் பயன்படுகிறது.

இவை தவிர இதில் கிடைக்கும் சோகை, பண்ணாடை, மட்டைகள் அடுப்பெரிக்க உதவுகிறது. இவ்வாறு பல்வேறு வகையில் பயன்படும் தென்னை மரத்தின் தேங்காய் மட்டையில் இருந்து பெறப்படும் மஞ்சி மூலமாக கயிறு தயாரிக்கப்படுகிறது. பழனியை அடுத்த ஆயக்குடி, பாலசமுத்திரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் ஊர் எல்லையில் சக்கரத்தின் மூலமாக கயிறு திரிக்கப்படுகிறது. இதை பலரும் குடிசைத் தொழில் போல செய்து வருகின்றனர். இதனால் ஏழை மக்களின் வாழ்வாதாரமாகவும் கயிறு தயாரிக்கும் தொழில் உள்ளது. தற்போது அதிகமாக கயிறு தயாரிக்கவும், சீராக கயிரின் தரம் இருக்கவும் இயந்திரங்கள் வந்துள்ளன. பழனியை அடுத்த புஷ்பத்தூரில் முருகேசன் என்பவர் கயிறு திரிக்கும் ஆலையை நடத்தி வருகிறார். இங்கு தற்போது 24 மணி நேரமும் பத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலை செய்து வருகின்றனர். சேலம், தஞ்சாவூர், பொள்ளாச்சி உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் இருந்து மொத்தமாக கொள்முதல் செய்யப்படும் தேங்காய்மஞ்சி ஊற வைக்கப்படு பின் உலர வைத்து இயந்திரம் மூலம் அது பிரிக்கப்படுகிறது. இவற்றை இதற்கென தயாரிக்கப்பட்ட இயந்திரத்தில் பணியாளர்கள் கொட்டியபின் இயந்திரமே முழுப்பணியை யும் மேற்கொள்கிறது. போதிய அளவு மஞ்சியை எடுத்துக்கொண்டு மூன்று பிரியாக அதை வெளியேற்றி கடையில் ஒரே கயிறாக திரிக்கிறது. இது உருளையில் சீராக சுற்றவும் செய்கிறது. மூன்று பிரியாக வரும் மஞ்சியானது துண்டாகும்போது இயந்திரம் சமிக்ஞை வழங்குகிறது. உடனே நிறுத்தி விட்டு அறுந்த பகுதியை சேர்த்து இயந்திரத்தை ஆன் செய்தவுடன் பணி தொடர்கிறது. இந்த ஆலையில் மூன்று இயந்திரங்கள் உள்ள நிலையில் இருவர் இப்பணியை கண்காணித்தால் போதுமானது. உருளைகளில் குறிப்பிட்ட அளவு கயிறு சேர்ந்தவுடன் அதை எடுத்து வைத்து விட்டு அடுத்த உருளையை இணைக்கின்றனர். இதில் சேர்ந்த கயிறை வெயிலில் காயவைத்து மற்றொரு உருளையில் சுற்றி குடோனில் சேமிக்கின்றனர். சாதாரண கயிறு ஒரு லாரியில் ஒருடன் வரை ஏற்றும்

போது இதே கயிற்றை ஸ்பூலிங் எனப்படும் இறுககட்டும் முறையில் அதே லாரியில் இரண்டு டன் ஏற்றலாம். இதற்கான இயந்திரங்களையும் இவர் வைத்துள்ளார். இதுகுறித்து ஆலை உரிமையாளர் முருகேசன் கூறுகையில், சிறுதொழிலான இது தற்போது கயிறுக்கு அதிக தேவை இருப்பதால் நல்லமுறையில் இயங்கி வருகிறது. தொழில்துவங்கும்போது வங்கிக்கடனுக்கு அலைந்து இறுதி வரை கடன் கிடைக்கவில்லை என்பதுதான் எனது ஆதங்கம். கோடிக்கணக்கில் கடன்வாங்கி கடையில் மஞ்சள் நோட்டீஸ் விடுபவர்களுக்கு வங்கிகள் கம்பளம் விரித்து வரவேற்கிறது. ஆனால், கடனை முறையாக செலுத்தி ஊரில் நல்லபெயர் எடுக்க வேண்டும் என என்போல் நினைப்போருக்கு வங்கிகடன் கிடைப்பதில்லை.கடையில் சொத்தின் பேரில் கடன் வாங்கி இந்த தொழிலை மேற்கொண்டுள்ளேன். சுமார் 10 பேருக்கு மேல் வேலை கொடுக்கும் திருப்தி உள்ளது. ஒருடன் மஞ்சி சுமார் 22 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி அதை கயிறாக மாற்றி சுமார் ரூ.36 ஆயிரம் வரை விற்கிறோம். மஞ்சியே மூலதனம். அதுவிலை ஏறும் போது கயிறு விலை ஏறும். அது குறையும் போது கயிறு விலை குறையும். மதிப்புக்கூட்டப்பட்ட பொருளுக்கு என்றுமே மரியாதை அதிகம். அதேதான் கயிறிலும். கேரளாவில் கயிறை மொத்தமாக வாங்கி தரைவிரிப்பாகவும், கால் மிதியடியாகவும் தயாரிக்கின்றனர். மேலும், கேரளாவில் பல இடங்களிலும் மலைப்பகுதியாக இருப்பதால் இதை வலைபோல செய்து சரிவான இடங்களில் கட்டி, அதன்மீது மண் கொட்டி செடிகளை வளர்க்கின்றனர். இதனால் மண்சரிவு தடுக்கப்படுவதோடு, கயிறு மக்கி நிலத்துக்கும் நண்பனாகிறது. ஊட்டி போன்ற ஊர்களில் இதை பின்பற்றினால் மண்சரிவு தடுக்கப்படும். கயிறில் இருந்து தயாரிக்கப் படும் மேட்கள் இத்தாலி, அரபு எமிரேட் நாடுகளுக்கு அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படுவதாலும், இதற்கு அங்கு அதிக வரவேற்பு அதிகமாகிவிட்டது. பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு நாட்டிற்கு மிகப்பெரும் கேடாகும். இதை தவிர்க்க இதுபோன்ற இயற்கைப்

பொருட்களால் தயாரிக்கப்படும் கயிறுகளை மக்கள் பயன்படுத்த அரசு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதுபோன்ற தொழில்களை ஊக்குவிக்க வங்கிக்கடன்களை வழங்க வேண்டும் என்றார்.

## எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ. 7 லட்சத்துக்கு வர்த்தகம்

மொடக்குறிச்சி, மார்ச் 10: எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 7 லட்சத்துக்கு தேங்காய் மற்றும் கொப்பரை வர்த்தகம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 193 மூட்டைகளில் 6.6 டன் எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 95.65-க்கும் குறைந்தபட்சமாக ரூ. 93.60-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 93.50-க்கும் குறைந்தபட்சமாக ரூ. 53-க்கும் என மொத்தம் ரூ. 5 லட்சத்து 81 ஆயிரத்து 802-க்கு ஏலம் மூலமாக விற்பனையானது. இதேபோல, 4 ஆயிரத்து 318 கிலோ எடையுள்ள 14 ஆயிரத்து 933 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்சமாக ஒரு டன் ரூ. 33 ஆயிரத்து 501-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 25 ஆயிரத்து 775-க்கும் என மொத்தம் ரூ. 1 லட்சத்து 27 ஆயிரத்து 668-க்கு ஏலம் நடைபெற்றது. விற்பனைக் கூடத்தில் மொத்தம் ரூ. 7 லட்சத்து 9 ஆயிரத்து 470-க்கு வர்த்தகம் நடைபெற்றது.

## குமரியில் இலவங்காய் சீசன் தொடங்கியது

குமரி மாவட்டத்தில் நிகழாண்டு ரூ. 1 கோடி மதிப்பில் இலவங்காய் வர்த்தகம் நடைபெறுவற்கான வாய்ப்புகள் உள்ளதாக இலவங்காய் வணிகர்கள் தெரிவித்துள்ளனர். இலவம் பஞ்சில் துயில் என்பது முதுமொழி. துயில் கொள்வதற்கு பயன்படுத்தும் மெத்தை மற்றும்

தலையணைகளில் மக்களின் முதல் தேர்வு, இலவம் பஞ்சில் தயாரிக்கப் பட்ட மெத்தைகள் மற்றும் தலையணைகள் ஆகும். இலவம் பஞ்சு எடுப்பதற்கான இலவங்காய்கள் குமரி மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளான ஆறுகாணி, பத்துகாணி, பேச்சிப்பாறை, சுருளகோடு, கீரிப்பாறை, மணலோடை, பொன்மனை உள்ளிட்ட இடங்கள் மற்றும் காணி தச்சமலை, தோட்டமலை, வளையந்தூக்கி, எட்டாம்குன்று உள்ளிட்ட காணிக்குடியிருப்புப் பகுதிகளில் அறுவடை செய்யப் படுகின்றன. மார்ச் முதல் மே வரையிலான மாதங்கள் இலவங்காய் களுக்கான சீசனாகும். தற்போது சீசன் தொடங்கியுள்ள நிலையில் தமிழகத்தின் முக்கிய இலவங்காய் சந்தையான போடி பகுதியிலிருந்து இலவங்காய் வணிகர்கள் குலசேகரத்தில் முகாமிட்டு இலவங்காய்களை கொள்முதல் செய்கின்றனர். நிகழாண்டு, கடந்த ஆண்டுகளை விட இலவங்காய்களுக்கு அதிக விலையாக காய் ஒன்றுக்கு ரூ. 1.25 விவசாயிகளுக்கு கிடைக்கிறது. இதில், குறிப்பாக இலவங்காய் விற்பனை மூலம் மலைவாழ் மக்களுக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட அளவில் வருவாய் கிடைக்கிறது. இதுகுறித்து, குலசேகரத்தில் முன்னோடி மலைபொருள் வணிகரான தங்கராஜ் மற்றும் குலசேகரத்தில் முகாமிட்டுள்ள போடிநாயக்கனூரைச் சேர்ந்த வணிகரான சிவராஜ் ஆகியோர் கூறியதாவது: தமிழகத்தில் போடிநாயக்கனூர், வருசநாடு, பெரியகுளம், பேச்சிப்பாறை ஆகிய இடங்களில் இலவங்காய்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. இலவங்காய்களுக்கு தமிழகத்தில் முக்கியச் சந்தையாக போடிநாயக்கனூர் உள்ளது. போடியை மையமாகக் கொண்டு சுமார் 50 மெத்தை, தலையணை தயாரிக்கும் ஆலைகள் உள்ளன. மேலும் போடியிலிருந்து இலவம்பஞ்சுகள் சென்னை, கொல்கத்தா, கேரளம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள மெத்தை, தலையணை தயாரிக்கும் ஆலைகளுக்கும், சர்வோதய சங்கம், காதி வாரியம் உள்ளிட்ட அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. போடியை மையமாகக் கொண்டு ஆண்டுக்கு ரூ.

100 கோடி மதிப்பில் இலவங்காய் வர்த்தகம் நடைபெறுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 50 லட்சம் காய்கள்: கன்னியாகுமரி மாவட்டத்தில் அறுவடையாகும் இலவங்காய்களில் ஏறக்குறைய 50 லட்சம் காய்கள் போடி பகுதிக்குச் செல்கின்றன. தற்போது ஒரு இலவங்காயின் கொள்முதல் விலை ரூ. 1.25 என உள்ள நிலையில் ரூ. 62.50 லட்சம் மதிப்பிலான வர்த்தகம் இதன் மூலம் நடைபெறும். இதுதவிர குறிப்பிட்ட சதவீத அளவிலான காய்கள் கேரள மாநிலம், நெய்யாற்றின் கரை அருகேவுள்ள ஓலத்தாணி மற்றும் குமரி மாவட்டப் பகுதிகளில் பாகோடு, நட்டாலம், குழித்துறை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மெத்தை, தலையணை ஆலைகளுக்கும் செல்கின்றன. ஒட்டுமொத்தமாக குமரி மாவட்டத்தில் நிகழாண்டு ரூ. 1 கோடி மதிப்பில் இலவங்காய் வர்த்தகம் நடைபெறும் என்றனர்.

## குறைந்த நீரில் சிறுதானியம் பயிரிட ஆலோசனை

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், சிறுதானியப் பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் சாகுபடித் தொழில்நுட்பம் குறித்த விவசாயிகள் பயிற்சி கிள்ளுக்கோட்டையில் திங்கள்கிழமை நடைபெற்றது. பயிற்சியை தலைமை தாங்கித் தொடங்கி வைத்த வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜஹான், விவசாயிகள் அதிகளவு நீர் தேவைப்படும் நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களைக் குறைத்துக்கொண்டு, நீர் குறைவாகத் தேவைப்படும் சிறுதானியங்கள், குறுந்தானியங்களைப் பயிர் செய்ய வேண்டும். சிறுதானியங்களுக்குத் தற்போது சந்தையில் நல்ல விலை கிடைத்துவருவதால் கூடுதல் லாபம் ஈட்டலாம் என்றார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் எஸ். ராஜசேகரன், குன்றாண்டார்கோயில் வேளாண் உதவி இயக்குநர் எம். சங்கரலட்சுமி உள்ளிட்டோர் பேசினர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு உசிலம்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்

தொழில்நுட்ப வல்லுநர்கள் செந்தில்குமார், சுந்தரவேல்ராஜன் ஆகியோர் பயிற்சி வழங்கினர். இப்கோ கூட்டுறவு உர நிறுவன விற்பனை மேலாளர் பொம்மணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். விவசாயிகளுக்கு சிறுதானிய உணவு வழங்கப்பட்டது. வேளாண் அலுவலர் எஸ். ராஜசேகரன் நன்றி கூறினார்.

**<u>556 குவிண்டால் பருத்தி ரூ.21.68 லட்சத்துக்கு விற்பனை</u>**

பெரம்பலூர் அருகே எளம்பலூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 556 குவிண்டால் பருத்தி ரூ. 21.68 லட்சத்துக்கு ஏலமுறையில் செவ்வாய்க்கிழமை விற்பனையானது. இந்த மறைமுக ஏல விற்பனையில், பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 109 விவசாயிகள் 556 குவிண்டால் எடை கொண்ட 1,588 மூட்டை பருத்தியை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பருத்தி கொள்முதல் வியாபாரிகள் மற்றும் இந்திய பருத்திக் கழக அலுவலர்கள் பருத்தியின் தரத்தை சோதித்து, அதற்குரிய விலையை நிர்ணயித்தனர். இதில், அதிக விலை நிர்ணயித்த வியாபாரிகளுக்கு, விவசாயிகளின் அனுமதியுடன் பருத்தி மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டன. இந்த ஏல விற்பனையை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது கூறியது: பெரம்பலூர் மாவட்ட பருத்தி விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு இந்திய பருத்திக் கழகதத்தின் மூலம் பருத்தியை கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த 23.2.2015 ஆம் தேதி நடைபெற்ற ஏலத்தில் 205 குவிண்டால் பருத்தி ரூ. 8லட்சத்துக்கும், மாரச் 3ஆம் தேதி 272 குவிண்டால் பருத்தி ரூ. 10 லட்சத்துக்கும் விற்பனையானது. மேலும், மாரச் 10ஆம் தேதி, செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஏலமுறை விற்பனையில் 556 குவிண்டால் பருத்தி ரூ. 21.68 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## தலைமுறைக்கும் அள்ளித் தரும் நெல்லி



நெல்லிக்காயில் வைட்டமின் "சி' மற்றும் மருத்துவ குணங்கள் உள்ளது. இதனால் நெல்லிக்காய்க்கு சந்தையில் நல்ல கிராக்கி உள்ளது. நெல், கரும்பு, மா, தென்னை, கொய்யா, வாழை பயிரிடும் விவசாயிகள், மூன்று முதல் நான்கு ஆண்டுகளுக்கு பிறகே நெல்லியில் வருமானம் கிடைக்கும், அதிக தண்ணீர் தேவை என்று கூறி அதன் சாகுபடியில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் பழநி அருகே வேப்பன்வலசை சேர்ந்த வி.கஸ்தூரிசாமி, 15 ஆண்டுகளாக 13 ஏக்கரில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட நெல்லிக்காய் மரங்களை வளர்த்து, ஏக்கருக்கு ரூ. ஒரு லட்சம் வருமானம் ஈட்டி, நெல்லியின் அருமை பெருமையை புரிய வைத்துள்ளார். அவர் கூறியதாவது: வழிகாட்டுதல் இல்லாத காரணத்தால் நெல்லிசாகுபடி செய்ய விவசாயிகள் தயங்குகின்றனர். நெல்லியில் என்.ஏ.,7, காஞ்சன், சாக்கையன், கிருஷ்ணா ஆகிய 4 ரக மரக்கன்றுகள் உள்ளன. பழநி தோட்டக்கலைத்துறையில் இலவசமாக 1200 மரக்கன்றுகள், பட்டிவீரன்பட்டியில் ஒரு கன்று ரூ.35வீதம் 1300 மரக்கன்றுகள் என மொத்தம் 7 ஏக்கரில் நெல்லி நட்டுள்ளேன். 15 அடி இடைவெளி விட்டு குழிதோண்டி, வேப்பம் புண்ணாக்கு, குப்பை, சூப்பர் பாஸ்பேட் உரமிட்டு 2,500 மரக்கன்றுகளை பராமரிக்கிறேன். ஒரு ஏக்கரில் கன்று நட்டுவளர்த்து, சொட்டு நீர்ப்பாசனம், நிலத்தை தயார்செய்தல், குழிதோண்டுவது, உரமிடுவது என ரூ.40ஆயிரம்

செலவாகும். ஒரு ஏக்கரில் 200 கன்றுகள் நடலாம். மூன்று ஆண்டுகளில் நன்றாக வளர்ந்து கைமேல் பலன் கிடைக்கும். ஒரு மரத்திற்கு 20 முதல் 30 கிலோ வரை காய் கிடைக்கும். சீசன் நேரத்தில் ஒருகிலோ ரூ.15 முதல் ரூ.20, மற்றபடி கிலோ ரூ.30 வரை விலை கிடைக்கும். டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி நெல்லி மரங்களில் பூவெடுக்கும் காலம். அப்போது மரம் வாடாமல் பார்த்து கொண்டால் போதும். தோட்டகலைத் துறையில் 50 சதவீத மானியத்தில் கிடைக்கும் தேன்பெட்டிகளை வாங்கி மரங்களுக்கு இடையில் வைத்தால் அயல்மகரந்த சேர்க்கையால் 30 சதவீதம் காய்ப்பு அதிகரிக்கும். நமக்கு தேனும் கிடைக்கும். நான் ஒரு ஏக்கரில் 3 தேன்பெட்டிகள் வைத்துள்ளேன். ஏப்ரல் முதல் ஜூலை வரை காய்ப்பு அதிகமாக இருக்கும். 12 வயதுள்ள மரத்தில் 60 முதல் 100 கிலோகூட நெல்லி காய் கிடைக்கும். சென்ற ஆண்டு 750 மரங்களில் அதிகபட்சமாக 700டன் வரை காய்கள் கிடைத்தது. சென்னை கோயம்பேடு வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். சொட்டு நீர்ப்பாசன வசதியுடன், இயற்கை உரமிட்டால் நல்ல வருவாய் கிடைக்கும், என்றார். தொடர்புக்கு 99654 92696. -**சி.முருகன், பழநி.**

## ***<u>சின்ன சின்ன செய்திகள்</u>***



**கோ.12 ரக சோளம்** : மானாவாரி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு இந்த ரகம் உருவாக்கப்பட்டுள்ளது. குளிர்கால மானாவாரி கரிசல் நில பகுதிகளுக்கு ஏற்றது. கோ.8 சோளத்தை விட 22.4 சதம் கூடுதல் மகசூல் கொடுக்கக்கூடியது. சோதனையில் அதிக பட்சமாக ஒரு எக்டருக்கு 5300 கிலோ மகசூல் கொடுத்துள்ளது. மானாவாரியில் அதிக தானிய மகசூலும், அதிக அளவு தீவன மகசூலும், எக்டருக்கு 11.9 டன் கொடுக்கக் கூடியது. குருத்து ஈ தண்டு துளைப்பான்,

அடிச்சாம்பல் நோய் ஆகியவற்றின் தாக்குதலை தாங்கி வளரும் தன்மையுடையது. தென்மாவட்டங்களில் மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது. கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தும் போது நன்கு செரிமனமாக்கும் தன்மை கொண்டது.

**அரிவாள்மனைப் பூண்டு :** சாலை ஓரங்களியெல்லாம் கேட்பாரற்று கிடக்கும் இதன் இலைக்கு இரத்தப்போக்கை நிறுத்தும் ஆற்றல் உண்டு. வெட்டுக்காயத்தின் மீது இதன் இலையைக் கசக்கிப் பிழிந்தால் ரத்தம் வெளியேறுவது சட்டென்று நிற்கும். சிறுசிறு காயங்களுக்கூட ரத்தம் சொட்ட சொட்ட மருத்துவமனைக்கு ஓடும் நாம் காலுக்கு கீழே உள்ள இந்த மூலிகையின் சாற்றைப் பயன்படுத்தி முதலுதவி செய்து கொள்ளலாமே. தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் நிறைந்திருப்பது அரிவாள்மனைப் பூண்டு. இலைகளின் ஓரங்கள் ரம்பம் போன்று கூரிய முனையுடைய இந்த மூலிகைகளைச் களைச்செடி என்றே கருதுகின்றனர். மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் இந்த இலையை போட்டி போட்டுக் கொண்டு வாங்குகின்றன. அரிவாள்மனைப் பூண்டின் விற்பனை யாளரிடம் பற்றி கூறும் வியாபாரி கருப்பையா. மொபைல் : 98423 95441, ஒரு டன் ரூ.7000ம் வரை விற்பனையாகிறது. விருதுநகர் மாவட்டம் சதுரகிரிமலை அடிவாரத்தைச் சேர்ந்த வியாபாரி மற்றும் விவசாயியான கருப்பையா மழைக்காலத்துல அதிக இலைகளோட இருக்கும் போது அறுவடை செய்தால் இதுல மருத்துவ குணங்கள் அதிகமாகஇருக்கும்.

**முண்டு மிளகாய் :** கார்த்திகையில் விதைத்து சித்திரை, வைகாசி மாதங்களில் அறுவடை செய்யப்படும் முண்டு மிளகாய் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 19,280 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு மிளகாய் சாகுபடிக்கான செலவு ரூ.10,000 செய்தால் 3 மடங்கு லாபம் கிடைக்கும். மாவட்டத்தில் நிலவும் வறட்சியை நன்கு தாக்குப்பிடித்து வளரக்கூடிய முண்டு மிளகாய் தனித்தன்மையே அதன் அதிகபட்சமான காரத்தன்மை தான். அதனால் முண்டு மிளகாய்களுக்கு உலகளவில் நல்ல சந்தை உள்ளது. ராமநாதபுரம்

முண்டு மிளகாய்க்கு புவிசார் குறியீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைஎழுந்துள்ளது.

**வெள்ளரி "சிம்ரன்' :** சின் ஜெண்டா நிறுவனம் ஒரு வெள்ளரிக்காய் ஹைபிரிடை விநியோகிக்க ஆரம்பித்துள்ளது. அனுபவ விவசாயி "ஸ்ரீகாந்த், த/பெ.நாகராஜ் மணியம்மாள், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்-635 008. போன் : 95858 17182, கடந்த முறை சிம்ரன் போட்டிருக்கிறார். 50 கிலோ சிப்பங்களில் சந்தைக்கு எடுத்துச் செல்கின்றன. ஒரு சிப்பம் ரூ.2000க்கும் போகியிருக்கிறதாம். சமயத்துல ரூ.100, 80க்கும், ஏன் விற்காமல் கூட போவதுண்டு என்கிறார். சராசரியாக 50 கிலோ மூடை ரூ.400 - 500க்கு போகும் என்கிறார். 45 நாட்களில் காய் கிடைக்க ஆரம்பிக்கிறது. அதிலிருந்து ஒன்றரை மாதங்கள் காய் தொடர்ந்து கிடைக்கும். ஒரு நாள் விட்டு ஒருநாள் அறுவடை. ஒரு காய் 200 கிராம் இருக்கும் போது மார்க்கெட் நன்றாக இருக்கும் என்கிறார். 45-வது நாளிலிருந்து 45 நாட்களுக்கு 50 கிலோ சிப்பம் 500 சிப்பங்கள் கிடைக்கும் என்கிறார் விவசாயி. சித்ரா போன்ற ரகங்கள் போகும் போது காய் 1 அடி நீளமாக வருவதாகவும், சிம்ரன் போகும் போது கால் அடி வருவதாகவும் கூறுகிறார். காய் சைஸ் சின்னதானால் ஈஸியாக மார்க்கெட் ஆகும். சிம்ரனில் ஏகப்பட்ட பூக்கள் வருவதாகவும், எல்லா பூக்களையும் காயாக்கினால் 2-3 லாரி லோடு கிடைக்கும் என்றார் விவசாயி. தொடர்புக்கு: பாலகுரு, சின் ஜெண்டா, கிருஷ்ணகிரி. போன்: 94422 14885. - **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

<u>**கோடை இறவை பருத்தி சாகுபடியாளர்களின் கவனத்திற்கு…**</u>



கோடைப்பருவத்தில் பருத்தி சாகுபடி செய்ய இருக்கும் விவசாயிகள் அதிக மகசூல் பெற கீழ்காணும் தொழில்நுட்பங்களை கடைபிடிக்கவும். சம வயதுள்ள இரகத்தை யாவரும் தேர்ந்தெடுத்து ஏக காலத்தில் (ஒரு வாரத்திற்குள்) விதைத்திட வேண்டும். இயன்றவரை பூச்சி நோய் தாங்கி வளரவல்ல எஸ்விபிஆர் 2 மற்றும் எஸ்விபிஆர் 4 இரகத்தைத் தேர்ந் தெடுத்து பயிரிட வேண்டும். சாணிப்பால் கொண்டு விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்த வேண்டும். பின்னர் விதைப்பதற்கு சற்று முன்பாக ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் சூடாமோனாஸ் புளரோசன்ஸ் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யும். காற்றடிக்கும் திசைக்கு குறுக்காக பார்கள் / வரிசைகள் அமைத்து விதைத்தால் மருந்தடிக்கும் போது மருந்துக்கலவை வீணாகாமல் தடுக்க உதவும். வயலைச் சுற்றிலும் உள்ள செடிகள், களைகளை (பூச்சிகளுக்கு மாற்றுணவாகப் பயன்படும்) அகற்றிச் சுத்தமாக வைக்க வேண்டும். ஏக்கருக்கு 10 டன் தொழுஉரம் மற்றும் 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடுவது பூச்சி மற்றும் நோய் தாக்குதலைக் குறைக்கும். (வேரழுகல், வாடல், நூற்புழு, தண்டுக்கூன் வண்டு, தரைக்கூன் வண்டு, வேர்ப்புழு). விதைத்த 30வது நாளில் சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் (ஏக்கருக்கு ஒரு கிலோ) இடுவது வேரழுகல், வாடல் நோய் தாக்குதலைக் குறைக்கும். நட்ட 20 மற்றும் 30ம் நாள் வேப்பெண்ணெய் 1 சதம் கரைசல் தூரில் ஊற்றுதல் தண்டுக்கூன், வண்டுத் தாக்குதலைக் குறைக்கும். ஊடுபயிராக வாய்க்கால்கள் மற்றும் பாத்தி வரப்புகளின் ஓரங்களில் தட்டைப்பயிறு வளர்த்தால் பொறி வண்டுகள் பெருக்கத்திற்கு துணைபுரியும்.

மேலும் பூச்சியின் வருகையை கண்காணிக்க ஊடுபயிராக மக்காச்சோளம், உளுந்து மற்றும் சீனி அவரை (கொத்தவரை) ஓரப்பயிராக ஆமணக்கு, சூரியகாந்தி பயிரிட வேண்டும். இரட்டை வரிசையில் பருத்தியை பயிரிட்டு இடைவெளியில் ஒரு வரிசை உளுந்து மற்றும் சீனி அவரை (கொத்தவரை) ஊடுபயிராக பயிரிடலாம். உளுந்து ஊடுபயிராக பயிரிட்டால் தத்துப்பூச்சி தாக்குதல் குறையும். சீனி அவரை ஊடுபயிராக பயிரிட்டால் தத்துப்பூச்சி மற்றும் காய்ப்புழு தாக்குதல் குறையும். மேலும் இந்த பயறு வகை ஊடுபயிர்கள் மூலம் வேர் முடிச்சுகளில் தழைச்சத்து உற்பத்தி செய்யப்பட்டு மண்ணின் வளம் மேம்படுகிறது. வெண்டை, ஆமணக்கு மற்றும் சூரியகாந்தி பயிர்கள் முறையே புள்ளிக் காய்ப்புழு, புரடீனியா மற்றும் அமெரிக்கன் காய்ப்புழு தாக்குதலைக் கவர்ந்திழுக்கும். அப்பூச்சிகளை அங்கேயே கட்டுப்படுத்தி விட வேண்டும். ஊடுபயிராக வாய்க்கால்களில் மக்காச்சோளம் பயிரிட கிரைசோப்பா, குளவிகள் போன்ற நன்மை தரும் பூச்சிகளின் பெருக்கத்திற்கு துணை செய்யும். வயலைச் சுற்றி அரண் போன்று சோளம் நெருக்கமாக (உயரமாக வளரும் ரகம்) வளர்க்க வேண்டும். (தத்துப்பூச்சி, இலைப்பேன்கள், வெள்ளை ஈ, மாவுப்பூச்சி மற்றும் காய்ப்புழுவின் அந்துகள் வயலினுள் நுழைவதைத் தடுக்க). இவ்வாறு ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசி ரியர் மற்றும் தலைவர் முனைவர் ம.குணசேகரன் தெரிவிக்கிறார்.

**<u>வேளாண் இயந்திர சேவை மையம்அமைக்க விரும்புவோருக்கு அழைப்பு</u>**

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி யூனியனில், வேளாண்மை இயந்திரங்கள் சேவை மையம் அமைக்கப்படுகிறது. இம்மையம் அமைக்க விரும்பவர்கள், வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தை அனுகலாம். கிருஷ்ணகிரி வேளாண்மை பொறியியல் துறை சார்பில் வெளியிட்ட அறிக்கை: விவசாய உற்பத்தியை பெருக்கவும், வேளாண்மை தொழிலாளர்கள் தட்டுப்பாட்டை சமாளிக்கவும், சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களுக்கு தேவையான அனைத்து வகையான

வேளாண்மை கருவிகள் மற்றும் இயந்திரங்கள், விவசாயிகளுக்கு நியாயமான வாடகைக்கு வழங்கவும், இயந்திரங்களை பழுது நீக்கவும், சேவை மையங்கள் அமைக்கப்பட உள்ளது.ஒரு சேவை மையம் அமைக்க தேவையான மொத்த தொகை, 25 லட்சம் ரூபாயாகும். இதில், அரசு மானியமாக, 10 லட்சம் ரூபாய் வழங்கும். பயனாளி குழுக்களின் பங்களிப்பு, 15 லட்சம் ரூபாயாகும்.கிருஷ்ணகிரி யூனியனுக்கு தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பயிர் செய்யப்படும் பயிர்களுக்கு தகுந்தவாறு, 25 லட்சம் ரூபாயுக்கு பெற வேண்டும். இந்த சேவை மையம் நடத்த பண்ணை மகளிர் குழுக்கள், நபார்டு உதவி பெற்ற விவசாய குழுக்கள், முன்னோடி விவசாய குழுக்கள், தனியார் நிறுவனங்கள் முன்வரலாம்.சேவை மையம் அமைக்க விருப்பம் உள்ளவர்கள் "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 311 பேஸ்-1, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மகளிர் போலீஸ் ஸ்டேஷன் அருகில், கிருஷ்ணகிரி' என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**<u>52.6 சதவீதம் தடுப்பூசி பணி நிறைவுகால்நடை பராமரிப்புத்துறை தகவல்</u>**

ஈரோடு:கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி, 52.6 சதவீதம் நிறைவடைந்து விட்டதாகவும், ஊசி போடப்பட்ட இடங்களில், விடுதல் உள்ளதா என்பது குறித்து ஆய்வு நடப்பதாக, கால்நடை பராமரிப்புத்துறை, ஈரோடு மண்டல இணை இயக்குனர் முருகன் தெரிவித்தார்.இதுகுறித்து, மண்டல இணை இயக்குனர் முருகன் கூறியதாவது:கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோயினை கட்டுப்படுத்தவும், அவற்றை தடுக்கவும், ஆண்டுதோறும் கால்நடைகளுக்கு, மார்ச், 1 முதல், 21ம் தேதி வரை, அனைத்து கால்நடைகளுக்கும் இலவச தடுப்பூசி போட வேண்டுமென, அரசு அறிவுறுத்தியுள்ளது. அதன் தொடர்ச்சியாக, ஈரோடு மாவட்டத்தில், 3 லட்சத்து, 69,000 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட அரசு

உத்தரவிட்டுள்ளது. அதன்படி, கோமாரி நோய் தடுப்பூசி பணிகளில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், 117 குழுக்கள் அமைக்கப்பட்டு, காலை, ஆறு முதல், ஒன்பது மணி வரை, மாலை, மூன்று முதல், ஐந்து மணி வரையிலும், தடுப்பூசி போடும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.அதில், மலைப்பிரதேசமான கடம்பூர், தாமரைக்கரை, பர்கூர், தாளவாடி ஆகிய பகுதிகளில், 45,252 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு, மலைப்பிரதேசம் பகுதிகள், ஏற்கனவே நிறைவடைந்துள்ளது.இந்நிலையில், நேற்றைய நிலவரப்படி, ஈரோடு மாவட்டத்தில் இதுவரை, 1 லட்சத்து, 94,800 கோமாரி தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது. இது, 52.6 சதவீதமாகும்.தற்போது மண்டல இணை ஆய்வாளர்கள், 17 குழுக்களாக பிரிந்து, ஏற்கனவே போடப்பட்ட இடங்களில், ஏதேனும் விடுதல் உள்ளதா என்பதை கண்டறிந்து, அங்கு தடுப்பூசி போட்டு வருகின்றனர்.அரசு குறிப்பிட்டுள்ள காலத்துக்குள், ஈரோட்டில் அனைத்து பகுதியிலும் முழுமையாக கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நிறைவடையும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ரூ.1.03 கோடி மதிப்பில் வேளாண் பொருள் ஏலம்

அந்தியூர்:அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்துக்கு, நேற்று முன்தினம், அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம், சங்கராப்பாளையம், கொளத்தூர், சென்னம்பட்டி, பர்கூர் உட்பட பல பகுதிகளில் இருந்து தேங்காய், எள், நிலக்கடலை, மக்காச்சோளம், பாசிப்பயிறு, துவரை, நிலக்கடலை மற்றும் பருத்தி ஆகிய விளை பொருட்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். மொத்தம், 18 ஆயிரம் தேங்காய், குறைந்த விலையாக, 5.50 ரூபாய்க்கும், அதிக விலையாக, 17.20 ரூபாய் என, 1.5 லட்சம் ரூபாய்க்கும்,

கொப்பரை தேங்காய், 100 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 82.18 முதல், 93.61 ரூபாய் வரை, 2 லட்சம் ரூபாய்க்கும், வெள்ளை ரக எள், 25 மூட்டைகள் கிலோ ஒன்றுக்கு, 77.09 முதல், 84.99 ரூபாய் என, 1.5 லட்சம் ரூபாய்க்கும் விற்பனையானது.மக்காச்சோளம், 60 மூட்டைகள் கிலோ ஒன்று, 11.69 முதல், 12.89 ரூபாய் வரை, 72 ஆயிரம் ரூபாய்க்கும், புதன்கிழமை நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 1,100 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. பச்சை கிலோ, 22.70 முதல், 28 ரூபாய் வரையும், காய்ந்தது, 33.33 முதல், 47.1 ரூபாய் வரை, 16 லட்சம் ரூபாய்க்கும், ஆமணக்கு, 5 மூட்டை, கிலோ ஒன்று, 36 முதல், 36.16 ரூபாய் வரை, 10 ஆயிரம் ரூபாய்க்கும், பச்சைப்பயிறு, 10 மூட்டைகள், 78.89 முதல், 83.69 ரூபாய் வரை, 50 ஆயிரத்துக்கும், நாணீப்பயிறு, 5 மூட்டைகள், 51.49 முதல் அதிகபட்சமாக, 52.69 ரூபாய் வரை, 25 ஆயிரத்துக்கும் விற்பனையானது. தட்டைப்பயிறு, 10 மூட்டை, 33.19 முதல், 51.29 வரை, 25 ஆயிரம் ரூபாய்க்கும், துவரை, 80 மூட்டைகள் குறைந்த விலையாக, 55.79க்கும் அதிக விலையாக, 59.60 ரூபாய்க்கும் விற்பனையாகி, 5.5 லட்சம் ரூபாய்க்கும், வியாழக்கிழமை நடந்த பருத்தி ஏலத்துக்கு "பிடி' ரக பருத்தி, 5,500 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு, குறைந்தபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு, 40 முதல், 45 ரூபாய் வரை, 77 லட்சம் என மொத்தம், ஒரு கோடியே மூன்று லட்சத்து, 32 ஆயிரம் ரூபாய்க்கு வேளாண் பொருட்கள் ஏலம் நடந்தது, என, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

## 1,000 ஹெக்டேரில்ராகி பயிரிட முடிவு

ஈரோடு:சிறு தானிய இயக்கத்தின் மூலம், 1,000 ஹெக்டரில் ராகி பயிரிட, வேளாண் துறை திட்டமிட்டுள்ளது. ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ் கூறியதாவது: மாவட்டத்தில், சிறு தானிய இயக்கம் மூலம், தாளவாடியில், 600 ஹெக்டரில் ராகி சாகுபடி செய்ய

முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டருக்கு, 3,000 ரூபாய் மானியம், வேளாண் இடுபொருட்கள், கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரசாயன உரங்கள், நுண்ணுயிர் ஊட்ட உரங்கள் வழங்கப்படும். இதற்காக, 18 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பர்கூரில், 200 ஹெக்டரும், கடம்பூரில், 200 ஹெக்டரும் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப் பட்டுள்ளது. மொத்தம், 30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.இதற்கான இடுபொருட்கள் விரைவில் வழங்கப்படும். கோடை மழை அல்லது ஜூனில் துவங்கும் மழையை ஆதாரமாக கொண்டு, ராகியை விவசாயிகள் பயிரிடுவர். இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், பர்கூரில் "இயற்கை விவசாய கிராம திட்டம்' செயல்படுத்தப்பட உள்ளது. தமிழக அரசு, இத்திட்டத்தை விரைவில் அறிவிக்க உள்ளது. இதற்காக பர்கூரில், 1,000 ஹெக்டர் நிலம், 33 கிராமங்களில் இருந்து தேர்வு செய்யப்படும். விவசாயிகளுக்கு, காய்கனி மற்றும் உணவு தானிய விதைகள் இலவசமாக வழங்கப்படும். இயற்கை உரம் தயாரிப்புக்கு தேவையான தொட்டி கட்டி கொடுக்கப்படும். இயற்கை விவசாயத்தை மேற்கொள்வது குறித்த பயிற்சிகள் அளிக்கப்படும். இதற்காக, 10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, என்றார்.

**<u>சரியான இடைவெளியில் சில்வர் ஓக்மரங்களை நட்டால் மட்டுமே பயன்</u>**

மஞ்சூர் :"தேயிலை தோட்டத்தில், 20 அடிக்கு ஒரு சில்வர் ஓக் மரத்தை நடவு செய்தால் மட்டுமே பயன் ஏற்படும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது. மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில், 4000 எக்டரில் தேயிலை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகளின் நலன் கருதி தேயிலை தோட்டங்கள் பராமரிக்கும் வழிமுறை குறித்து, தேயிலை வாரியம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி வருகிறது.குறிப்பாக, தேயிலை தோட்டங்களில், 20 அடிக்கு சில்வர் ஓக் நாற்று நடவு செய்து, ஒரு ஏக்கருக்கு, 120 மரங்கள் மட்டுமே நடவு செய்ய வேண்டும்; இப்படி

நடவு செய்வதால் வெயிலில் அளவு சரியான முறையில் தென்பட்டு தேயிலை மகசூலுக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை கிடைக்கும் என, வலியுறுத்தி வருகிறது. இது குறித்து தேயிலை வாரிய உதவி இயக்குனர் ரமேஷ் கூறுகையில்," தேயிலை தோட்டங்களில், 20 அடிக்கு ஒரு சில்வர் ஓக் மரத்தை நடவு செய்ய வேண்டும். ஆனால், பெரும்பாலான விவசாயிகள், இதனை கடைப்படிக்காததால் தேயிலை தோட்டத்துக்கு பாதிப்பு ஏற்படும். மேலும், வளர்ந்த சில்வர் ஓக் மரத்தின் மேல் பாகத்தை வெட்ட செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதங்கள் ஏற்ற காலமாகும்," என்றார்.

## பண்ணைபள்ளி பயிற்சி

கன்னிவாடி;ரெட்டியார்பட்டியில் விவசாயிகளுக்கான மக்காச்சோள பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு நடந்தது. வேளாண்மை துணை இயக்குனர் பாஸ்கரன் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் மனோகரன் முன்னிலை வகித்தார். காந்திகிராம வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப ஷாகின்தாஷ் பயிர்பாதுகாப்பு நுட்பங்கள் குறித்து விளக்கினார். அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் பாலகங்காதரதிலகர் ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## பூண்டு சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி

கொடைக்கானல்: கொடைக்கானல் மேல்மலை கிராமத்தில் பூண்டு சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் நடந்தது.தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கோழிகோடு பாக்கு மற்றும் வாசனை பயிர் மேம்பாட்டு இயக்கம் இணைந்து இம்முகாமை நடத்தின. சீனிவாசன் வரவேற்புரை ஆற்றினார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜாங்கம், மலை பூண்டின் முக்கியத்துவம், தேவை, மார்க்கெட், விவசாயிகளின் பங்கு குறித்து விளக்கப்பட்டது. மத்திய செம்மறி ஆடுகள் மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் ஆட்டு உரத்தின் பங்கு பற்றி கையேட்டினை அளித்து விளக்கப்பட்டது. இதில்

மலை தோட்ட பயிர்கள் துறை தலைவர் ஜான்சி ராணி, துணை இயக்குனர் பாண்டி, மத்திய செம்மறிஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ராஜேந்திரன், பேராசிரியர்கள் செந்தமிழ்ச் செல்வி, சதீஷ், அசோக்குமார், சீனிவாசன், சரவணன் பங்கேற்று பேசினர். மன்னவனூர் ஊராட்சியைச் சேர்ந்த 150 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## ரூ. 53 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்

ராசிபுரம்:நாமகிரிப்பேட்டை, வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 53 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் போனது. நாமகிரிப் பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்கள புரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி சென்றனர். நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 956 மூட்டை விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 10,169க்கும், குறைந்த பட்சம், 8,085 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 8,553க்கும், குறைந்த பட்சம், 7,479 ரூபாய்க்கும் ஏலம்போனது. பனங்காலி ரகம், அதிக பட்சம், 17 ஆயிரத்து, 777க்கும், குறைந்த பட்சம், 13,685 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 53 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## ரூ.1.64 கோடிக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம்:ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று முன்தினம், ஒரு கோடியே, 64 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம்

குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 12,658 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.எச்., ரகம் அதிக பட்சமாக, 4,997 ரூபாய், குறைந்த பட்சமாக, 4,479 ரூபாய், ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,349, குறைந்த பட்சமாக, 3,693 ரூபாய்க்கு ஏலம் போனது.ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த, 50க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பருத்தியை, ஒரு கோடியே, 64 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்து சென்றனர்.

# தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மாம்பழ சீசன் துவங்கியது வரத்து குறைவால் விலை உயர்வு**

கோவை, : மாம்பழ சீசன் துவங்கியுள்ளது. அறுவடையாகும் பழங்கள் ஏற்றுமதியாவதால் சில்லரை விற்பனைக்கு வரத்து குறைந்துள்ளது. இதனால் மாம்பழ வகைகள் கிலோ ரூ.60 முதல் ரூ.200 வரை விற்பனையாகிறது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாத துவக்கத்தில் மாம்பழ சீசன் துவங்கும். இந்த ஆண்டு ஒரு வாரம் தாமதமாக துவங்கியுள்ளது. பொள்ளாச்சி, சேலம், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விளைந்த மாங்காய்கள் கடந்த ஓரிரு நாட்களாக அறுவடையாகி வருகிறது. இவற்றில் 75 சதவீதம் சென்னை, பெங்களூர், கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. 25 சதவீதம் மட்டுமே தமிழகத்தில் சில்லரை

விற்பனைக்கு வருகிறது. கோவைக்கு பொள்ளாச்சி, மீனாட்சிபுரம், வண்டித்தாவளம் ஆகிய பகுதிகளில் இருந்து கடந்த 2 நாட்களாக மாம்பழம் வரத்து அதிகரித்துள்ளது. இதில் மக்கள் அதிகம் விரும்பி சாப்பிடும் ரகங்களான செந்தூரம், பங்கனபள்ளி, இமாம்பசந்த், அல்போன்சா ஆகியவை தினசரி 3 முதல் 6 டன் வரை வருகிறது. இது ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் 20 டன்னுக்கு குறையாமல் வரும். தற்போது வரத்து குறைவால் விலை உயர்ந்துள்ளது. சில்லரை விற்பனையில் செந்தூரம் கிலோ ரூ.60, பங்கனபள்ளி ரூ.100, இமாம்பசந்த் ரூ.150, அல்போன்சா ரூ.200 வரை விற்கப்படுகிறது. ஏப்ரல் மாதத்தில் இதன் விலை பாதியாக குறையும் என்கின்றனர் வியாபாரிகள். இது குறித்து உக்கடம் பழ விற்பனையாளர் சித்திக் கூறுகையில், 'தற்போது பொள்ளாச்சி பகுதியில் இருந்து கோவைக்கு வந்த ரகங்களே சேலத்தில் இருந்து வருவது வழக்கம். ஆனால் அவை வர 10 நாளாகும். தற்போதைய விலை உயர்வால் மக்கள் நுகர்வு பெரிதாக துவங்கவில்லை. விலை பாதியாக குறைந்தபின்னர் விற்பனை அதிகரிக்கும்.' என்றார். மாநகரை பசுமையாக்க வேளாண் பல்கலை.யுடன் கைகோர்க்கிறது மாநகராட்சி கோவை, : கோவை யை பசுமை நகரமாக மாற்ற வேளாண் பல்கலைக்கழகத்துடன் கைகோர்க்க மாநகராட்சி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. தமிழகத்தில் சென்னை க்கு அடுத்து முக்கிய நகரங்களில் ஒன்றாக கோவை உள்ளது. மரங்கள் சூழ்ந்த பசுமை போர்வையாக ஒரு காலத்தில் கோவை திகழ்ந்தது. ஆனால் சாலை கள் விரிவாக்கம், அடிப் படை உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல், மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் போன்ற பல்வேறு வசதிகளுக்காக சாலையில் இடையூறாக இருந்த மரங்கள் வெட்டப்பட்டது. மரங்களை வெட்டி பசுமைப்போர்வை யை கலைப்பதற்கு இயற்கை ஆர்வலர் கள், சுற்றுச்சூழல் எதிர்ப்பு தெரிவித்தனர். கோவை மாநகராட்சி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ்

சிங்காநல்லூர் குளம், உக்கடம் பெரியகுளம் உள்ளிட்ட 8 குளங்கள் உள்ளது. மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்களில் பிரதான வாய்க்கால்கள் மூலமும், குளங்களுக்கு அருகில் உள்ள வீடுகளில் இருந்தும் குழாய்கள் மூலம் கழிவுநீர் வருகிறது. சுத்திகரிப்பு நிலையங்கள் குளங்கள் அருகே இல்லாததால் இந்த கழிவுநீர் நேரடியாக குளங்களில் கலந்து, நீர் மாசு ஏற்படுகிறது. அதுதவிர, குளங்களில் வளரும் ஆகாயத்தாமரைகளாலும் நீர் நிலைகள் பாதிக்கப்பட்டது. ஆகாயத்தாமரைகளை கட்டுப்படுத்த கோவை மாநகராட்சி நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தும் எந்த பலனும் அளிக்கவில்லை. இந்நிலையில் கோவை மாநகரை பசுமை மிகுந்த நகராக மாற்றும் நோக்கத்திற்காக மாநகராட்சிக்கு உட்பட்ட சாலைகளின் ஓரங்கள், மாநகராட்சி பூங்காக்கள், மாநகராட்சி காலி மனையிடங்கள், மாநகராட்சி அலுவலக வளாகங்கள், மாநகராட்சி பள்ளிக்கூடங்கள், மாநகராட்சி மருத்துவமனைகள், மாநகராட்சி உரக்கிடங்குகள், மாநகராட்சி குளக்கரைகளில் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதற்கும் மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் நீர்நிலைகளில் வளர்ந்து வரும் ஆகாயத்தாமரைகளை அகற்றி அவை மீண்டும் வளராத வண்ணம் நீர் நிலைகளை பாதுகாப்பதற்கும், தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை பெறுவதற்கும், வல்லுநர் குழுவை அனுப்பி ஆய்வு செய்து அறிக்கை அளித்திட ஏது வாக கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவும் மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறு கையில்,‘ கோவை மாநகரை பசுமை நகரமாக ஆக்குவதற்கு வேளாண் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள மாநகராட்சி முடிவு செய்துள்ளது. இதற்காக ஆகும் செலவுத்தொகையை மாநகராட்சியின் நிதியில் இருந்து எடுத்துக் கொள்ளவும் முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் தற்போது நடந்து வருகிறது,‘ என்றனர்.
குன்னூரில் கனமழை எதிரொலி பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து

அதிகரிப்பால் விவசாயிகள் உற்சாகம் ஈரோடு, : பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நீலகிரி மாவட்டத்திற்கு முக்கிய இடம் உண்டு. குறிப்பாக ஊட்டி, குன்னூர், கூடலூர், கோத்தகிரி போன்ற பகுதிகளில் மழை பெய்தால் பவானி ஆற்றின் வழியே பாய்ந்தோடி பவானிசாகர் அணையை வந்தடையும். டிசம்பர் மாதத்திற்கு பிறகு கடந்த 2 மாதங்களாக வறட்சியான வானிலையே நிலவி வந்த நிலையில் நேற்று முன்தினம் குன்னூரில் கனமழை பெய்தது. திடீர் கனமழையால் குன்னூரில் இருந்து ஓடும் காட்டருவிகளிலும், சிற்றோடைகளிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. கல்லாறு வழியாக மேட்டுப்பாளையம் பவானி ஆற்றில் கலந்த மழைநீர் பவானிசாகர் அணையை வந்தடைந்தது. இதன்காரணமாக கடந்த சில நாட்களாக 150 முதல் 200 கனஅடி மட்டுமே இருந்த பவானிசாகர் அணையின் நீர்வரத்து நேற்று காலையில் 1279 கனஅடியாக அதிகரித்து காணப்பட்டது. தொடர்ந்து பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்காக வும் வாய்க்கால்களிலும், ஆற்றிலும் தண்ணீர் திறக்கப்பட்டு வந்ததால் நீர்மட்டம் வேகமாக சரிவடைந்து வந்தது. இந்நிலையில் திடீரென பெய்த மழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்திருப்பது ஈரோடு மக்களை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 66.07 அடியாகவும், அணையில் இருந்து கொடிவேரி, காலிங்கராயன் பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்கும் 1100 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையில் இருந்து கீழ்பவானி பாசனத்துக்குட்பட்ட புன்செய் நிலங்களுக்கு தற்போது தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டுள்ளது. பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் முதலாம் மண்டலத்தின் புன்செய் பாசனத்துக்குட்பட்ட ஒரு லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களுக்கு 6 சுற்றுகளாக தண்ணீர் திறக்க முடிவு செய்து இதுவரை 3 சுற்றுகள் நிறைவடைந்துள்ளது. தற்போது கீழ்பவானி பாசனப்பகுதியில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, கேழ்வரகு, கம்பு,

சோளம், மக்காச்சோளம் போன்ற மானாவாரி பயிர்களின் சாகுபடி அமோகமாக உள்ளது. கிட்டதட்ட 2 ஆண்டுக்கு பிறகு பரவலாக புன்செய் பாசனப்பகுதிகளில் விளைந்துள்ள நிலக்கடலை, எள் போன்ற பயிர்களால் பச்சைபசேல் என காட்சியளிப்பதால் பாசனப்பகுதிகள் முழுவதும் ரம்மியமாக உள்ளது.

**துறையூரில் நாளை மறைமுக பருத்தி ஏலம்**

திருச்சி, : துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறைமுக பருத்தி ஏலம் நாளை நடக்கிறது. திருச்சி மாவட்டம் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்தாண்டு முதல் பருத்தி மறைமுக ஏலம் நடந்து வருகிறது. இந்தாண்டில் தற்போது பருத்தி அறுவடை துவங்கியுள்ளது. இதனால் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை தோறும் பருத்தி மறைமுக ஏலம் நடந்து வருகிறது. அதன்படி மறைமுக பருத்தி ஏலம் நாளை நடக்கிறது. இதில் துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை, முசிறி, மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பருத்தி அறுவடை செய்து கொண்டிருக்கும் விவசாயிகள் வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்று பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**திருச்செந்துறையில் இன்று வாழைத்தார் பொது ஏலம்**

திருச்சி, : திருச்செந்துறை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் இன்று நடக்கிறது. ஸ்ரீரங்கம் தாலுகா திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் திருச்சி வேளாண் விற் பனை மற்றும் வணிகத் துறை சார்பில் வாழைத்தார் பொது ஏலம் இன்று நடக்கிறது. இந்த ஏலத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷன் இல்லாமல் உடனுக்குடன் பணம் பட்டு வாடா செய்யப்படுகிறது. வாழைத் தார் கொண்டு வரும் விவசாயிகள் காலை 11 மணிக்குள் முன்பதிவு செய்ய வேண் டும். திருச்சி மாவட்டம் அந்தநல்லூர், மணிகண் டம், திருவெறும்பூர், லால் குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டி யம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் வாழைத்தார் களை திருச்செந்துறை

ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத் துக்கு கொண்டு வந்து பொது ஏலத்தில்பங்கேற்கலாம்.

**<u>செட்டிக்குளம் வளாகத்தில் ரூ.1.82லட்சத்திற்கு சின்ன வெங்காயம் ஏலம்</u>**

பெரம்பலூர்,: செட்டிக்குளம் வெங்காய வணிகவளாகத்தில் 14டன் சின்ன வெங்காயம் ரூ1.82லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவித் திருப்பதாவது : பெரம்பலூர் மாவட் டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளத்தில் உள்ள வெங்காய வணிகவளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் முலம் கடந்த 8ம் தேதி திறந்தமுறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் துறையூர், உப்பிலியபுரம், சத்திரமனை, அம்மாபாளையம், இரூர், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், சீதேவிமங்கலம், பொம்மனப்பாடி ஆகியக் கிராமங்களைச் சேர்ந்த 49 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்தனர். இதில் பாண்டிச்சேரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, மண்ணச்சநல்லூர், லாடபுரம், குரூர், சீதேவிமங்கலம், சத்திரமனை, பொம்மனப்பாடி, தேனூர் ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த 11 வியாபாரிகள் தங்களது 213 மூட்டை அதாவது 14,127கிலோ எடைகொண்ட சின்ன வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். இதில் சின்னவெங்காயம் புதிது அதிகபட்சமாக கிலோ ரூ.19.50க்கும் விதை வெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ. 18க்கும், சராசரியாக ஒரு கிலோரூ. 13க்கும் விற்பனையானது. இதன்மூலம் ரூ.1,82,653 க்கு விற்பனை நடைபெற்றது. அனைத்து விவசாயிகளுக்கும் பணம் உடனடியாக வழங்கப்பட்டது. இந்த வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்தமுறை ஏலம் நடைபெற்று வருகிறது. வெங்காய விளைபொருளை நன்கு சுத்தப்ப டுத்தி, தரம்பிரித்து இன்று(10ம்தேதி) செவ்வாய்கிழமை காலை 10மணிக்குள் கொண்டு வந்து விற்பனைசெய்து பயன்பெறலாம்

எனத்தெரிவித்துள்ளார்.

**<u>எளம்பலூர் விற்பனை கூடத்தில் இன்று பருத்தி ஏல விற்பனை</u>**

பெரம்பலூர்,: பெரம்பலூர் கலெக்டர் தரேஸ் அகமது வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டம் எளம்பலூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்திய பருத்திக் கழகத்தின் மூலம் இன்று (10ம்தேதி) ஏலமுறையில் பருத்தி விற்பனை நடைபெற உள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நவீன எலக்ட்ரானிக் எடை இயந்திரத்தினை கொண்டு சரியான எடையும், எந்தவித தரகுமின்றி ஏலவிற்பனை செய்யப் படுகின்றது. விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வரும் பருத்தியின் ஈரப்பதம், இழையின் நீளம், இழையின் வலிமைத்தன்மை போன்ற தரத்தினை ஆய்வு செய்து அதனடிப்படை யில் இந்திய பருத்திக்கழகம் விலை நிர்ணயம் செய்கிறது. நல்ல தரமான 27.5 முதல் 30.5மிமீ வரை இழையின் நீளமுள்ள ஸிசிபி 2, ஸிசிபி 20 போன்ற நீண்டஇழை ரக பருத்தி ஒரு குவிண்டாலுக்கு ரூ.3950 விலை கிடைக்கும். 32.5 முதல் 37.0மிமீ வரை இழையின் நீளமுள்ள எம்ஆர்சி 7918, எம்ஆர்சி 6918 போன்ற மிக நீண்டஇழை ரக பருத்தி ஒரு குவிண்டாலுக்கு ரூ.4,450 விலை கிடைக்கும். 8 சதவீத ஈரப்பதத்துடன் உள்ள பருத்திக்கு முழுவிலையும், ஒவ்வொரு சதவீதம் அதிகரிக்கும் போதும் முழு விலையில் ஒரு சதவீதம் குறைத்து விலை நிர்ணயிக்கப் படும். அதாவது ஸிசிபி 2, ஸிசிபி 20 போன்ற நீண்டஇழை ரக பருத்தி, 9சதவீத ஈரப்பதத்துடன் இருப்பின் ஒருசதவீதம் குறைத்து ரூ.3910 விலைகிடைக்கும். எனவே பருத்தி விவசாயிகள் நன்கு வெடித்தப் பருத்தியினை அறுவடை செய்து நிழலில் உலர வைத்து 8சதவீத ஈரப்பதத்துடன் தூசியில்லாமல் சுத்தப்படுத்தி கொண்டுவரும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். இந்திய பருத்திக்கழகம் கொள்முதல் செய்யப்பட்ட தினத்திலிருந்து 8நாட்களுக்குள் பணம் கிடைக்குமாறு பருத்தி விவசாயிகளுக்கு காசோலையாக பணம் பட்டுவாடா செய்யப்படும். விவசாயிகள் எளம்பலூர் ஒழுங்குமுறை

விற்பனைக் கூடத்திற்கு பருத்தியை கொண்டுவந்து விற்பனை செய்து பயன்பெறலாம்.

**<u>நீடாமங்கலம் பகுதியில் 3ம் போக கோடை நெல் சாகுபடி பணி தீவிரம்</u>**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் கோலட்டத்தில் 3ம் போக கோடை நெல் சாகுபடி பணி தீவிரமாக நடந்து வருகிறது. திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை கோட்டத்தில் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தற்போது கோடை மூன்றாம் போக நெல் சாகுபடி பணி நடந்து வருகிறது. சன்னரகமான ஆடுதுறை 45,ஆடுதுறை43 ரகம் மின் மோட்டார் மூலம் விடப்பட்ட தண்ணீரால் நாற்றுபறித்து நடவு பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஒரே நேரத்தில் விதை தெளிப்பு நடந்ததால் சில இடங்களில் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆள் பற்றாக்குறையால் சில இடங்களில் இயந்திரங்கள் மூலம் நடவு பணி நடை பெற்று வருகிறது. இது தொடர்பாக நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் கூறுகையில், ஒரு ஏக்கரில் இயந்திரத்தின் மூலம் நடவு செய்தால் ரூ.5,000 வரை செலவாகும். ஆனால் ஆள் வைத்து நடவு செய்தால் ஏக்கருக்கு ரூ.6,000 வரை செலவாகும். இயந்திர நடவில் இடை வெளி விட்டு விடுவதால் பூச்சி தொல்லை குறையும். களை எடுப்பு செலவு குறையும். குறைந்த தண்ணீர் செலவு, குறைவான உரம் செலவாகும். எனவே இயந்திர நடவில் குறைந்த செலவில் அதிக லாபம் பெறலாம் என்றார்.

**<u>98,500 மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி</u>**

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வரை 98 ஆயிரத்து 500 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப் பட்டுள்ளதாக கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மாவட்டத்தில் உள்ள பசு மற்றும் எருமை கால்நடைகளுக்கு 6வது

சுற்றாக கோமாரி நோய் தடுப்பூசி போடும் சிறப்பு முகாம் கடந்த 1ம் தேதி முதல் நடை பெற்று வருகிறது. மத்திய அரசு மூலம் 2 லட்சம் ஊசிகள் வரப்பெற்றதில் 10ம் தேதி வரையில் 98 ஆயிரத்து 500 கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள் ளன. வரும் 21ம் தேதி வரை யில் நடை பெறும் இந்த முகா மில் மீதமுள்ள ஊசிகள் போடப்பட உள்ளன. காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும், பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தடுப்பூசி போடும் பணிகள் கிராமம் கிராமமாக நடைபெற்று வருகின்றன. எனவே கால்நடைகளை வளர்க்கும் பொது மக்கள் அனைவரும் தங்களது 4 மாதத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் அனைத்திற்கும் தவறாமல் தடுப்பூசி போடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார். மேலும் திருவாரூர் ஒன்றியத்திற்குட்பட்ட கீழகாவாதுகுடி ஊராட்சி வட கால் கிராமத்தில் நடை பெற்ற தடுப்பூசி போடும் பணியினை நேற்று கலெக் டர் நடராஜன் ஆய்வு செய் தார். இதில் கால்நடை துறை மண்டல இணை இயக்குநர் சின்னப்பா, உதவி இயக்குநர் கள் பாலகிருஷ்ணா, தன பால், லூர்து சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>கொள்ளிடம் அருகே கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

கொள்ளிடம், : நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே உள்ள அளக்குடி கிராமத்தில், மயிலாடுதுறை கோட்ட கால்நடைபராமரிப்பு துறை சார்பில், கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் கலியமூர்த்தி தலைமை வகித்தார். துணைத் தலைவர் திருவரசன் வரவேற்றார். மயிலாடுதுறை கோட்ட உதவி இயக்குநர் செல்லதுரை கலந்து கொண்டு பேசுகையில், கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக்கொள்வதால், கால்நடைகளுக்கு, கோமாரி நோய் வருவதை தடுத்துவிடலாம். 6 மாதத்திற்கு ஒரு முறை தடுப்பூசி

போட்டுக்கொள்ள வேண்டும். இப்படி 3 வருடத்திற்கு தடுப்பூசி போட்டுக்கொண்டால் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் அறவே வராது என்றார். டாக்டர்கள் விவேகானந்தன், யஸ்வந்த்ராவ், கால்நடை ஆய்வாளர் ராஜா, உதவியாளர்கள் ராமசந்திரன், பழனிவேல் ஆகியோர் கொண்ட மருத்துவர் குழுவினர், தடுப்பூசிபோடும் பணியில் ஈடுபட்டனர். 2 நாட்கள் அளக்குடியில் நடைபெற்ற முகாமில் மட்டும் 1,200 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டன.

## கோவை வேளாண் பல்கலை.யில் 2 நாள் பயிற்சி முகாம் இளைஞர்களுக்கு அழைப்பு

நாகை, : கோவை வேளாண் பல்கலை கழகத்தில் 2 நாள் நடைபெற உள்ள பயிற்சி முகாமில் பங் கேற்க இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாகை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் ஆகியவற்றின் சார்பில் கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வருகிற 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் இளைஞர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. இதில் பருவத்திற்கேற்ற பயிர் ரகங்கள், பராமரிப்பு, நவீன தொழில்நுட்பங்கள், காய்கறி தோட்டக்கலை வேளாண்மையில் அதிக விளைச்சல் பெறுவதற்கான வழி வகைகள், மானியங்கள், திட்டங்கள் குறித்த விவரங்கள் உள்ளிட்ட தகவல் களை தொழில்நட்ப வல்லுனர்கள், முன்னோடி விவசாயிகள் பயிற்சி வழங்க உள்ளனர். முகாமில் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டு எதிர்காலத்தில் விவசாயத்தை சிறப்பாக செய்து உயர் விளைச்சலை பெற்று பொருளாதார முன் னேற்ற அடைய வேண்டும். எனவே நாகை, திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த ஆர்வமுள்ள இளைஞர்கள் 9962840682, 98409 74748 ஆகிய தொலைபேசி எண் களை தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். பயிற்சியில் கலந்து கொள்ள எந்தவித கட்டணமும் கிடையாது. மேலும்

விவரங்களுக்கு நாகை மாவட்ட கலெக்டர் அலுவலக எதிர்புறம் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், மாவட்ட கிராம வள மையத்தில், முதன்மை அலுவலர் செல்வராஜை, தொடர்பு கொண்டு அறிய லாம். அல்லது 9962840682, 98409 74748 ஆகிய தொலைபேசி எண் களை தொடர்பு கொண்டும் அறியலாம் என நாகை எம். எஸ்.சுவாமி நாதன் ஆராய்ச்சி நிறுவன முதன் மை விஞ்ஞானி முனைவர் பரசுராமன் தெரிவித்துள்ளார்.

## <u>திசு வாழையில் பரவும் இலைப்புள்ளி நோயை தடுக்க ஆலோசனை</u>

சின்னமனூர், : சின்னமனூர் வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள திசு வாழையில் இலைப்புள்ளி நோய் வேகமாக பரவி வருகிறது. இந்நோயை தடுக்கும் முறைகள் குறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொறுப்பு) குமரவடிவேல் கூறியதாவது: ‘‘ சின்னமனூர் வட்டார பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள திசு வாழையில் பருவநிலை மாற்றத்தால் இலைப்புள்ளி நோய் பரவி வருகிறது. இந்நோய் தாக்கிய வாழை இலையின் மேல்பகுதியில் வெளரிய மஞ்சள் அல்லது பச்சை கலந்த மஞ்சள் நிறத்தில் சிறு புள்ளிகள் இலை நரம்புகளுக்கு இணையாக தோன்றும். நாளைடைவில் நீள் வட்ட வடிவத்தில் கரும் பழுப்பு நிறமாக மாறிவிடும். அதன்பிறகு இப்புள்ளிகள் சாம்பல் நிறமாகவும் ஓரப்பகுதி யில் மஞ்சள் நிறவளையமும் காணப்படும். முற்றிய புள்ளிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து பெரிய புள்ளிகளாக மாறி இலைகள் கருகி விழுந்து விடும். மற்ற இலைகளுக்கும் நோய் பரவும். தோட்டங்களில் களைகளை முழுமையாக அகற்றிட வேண்டும். நோய் தாக்கப்பட்ட இலைகளை வெட்டி எடுத்து அவற்றை தோட்டத்திலிருந்து வெளியேற்றி தீயிட்டு அழிக்க வேண்டும். 4 முதல் 5 மாத வாழையாக இருந்தால் மேங்கோசெப் அல்லது கார்பெண்டாசிம் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 6 முதல் 7 மாத வாழையாக இருந்தால் காப்பர் ஆக்சி குளோரைடு 2.5 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். 9 மாத வாழையாக இருந்தால் புரோப்பிகோனசோல் 1 மிலி ஒரு லிட்டர்

நீரில் கலந்து தெளிக்க வேண்டும். 10 முதல் 11 மாத வாழையாக இருந்தால் பைராகிளாஸ்டிரோபின் 1.5 கிராம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். 15 முதல் 20 நாட்களுக்கு ஒரு முறை இம்மருந்துகளை பனோல் ஆயிலுடன் கலந்து தெளித்தால் இலைப்புள்ளி நோயின் தாக்கம் இருக்காது. இவ்வாறு தெரிவித்தார்.

## <u>வேளாண்மை தொழிற் பயிற்சி முகாம்</u>

நித்திரவிளை, : கொல்லங்கோடு அருகே அடைக்காகுழி பகுதியில் மத்திய அரசின் அம்மா வேளாண்மை தொழிற் பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை குழு தலைவர் மைதீன் தலைமை வகித்தார். உறுப்பினர்கள் முன்னாள் எம்.எல்.ஏ. ஜாண் ஜோசப், விஜயகுமார், கிருஷ்ணராஜ், வெற்றிவேந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முகாமில் தென்னை மரம் நடுதல், வாழை நடுதல் மற்றும் பயிர்களை வண்டுகள் தாக்கா வழிமுறைகள் குறித்து வேளாண்மை அலுவலர் பென்சாம் மற்றும் ஆனந்தன் ஆகியோர் விளக்கம் அளித்தனர்.

## <u>அப்பட்டுவிளையில் தென்னை உற்பத்தியாளர் சங்க தொடக்கவிழா</u>

திங்கள்சந்தை, : வில்லுக்குறி அருகே அப்பட்டுவிளை புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் சடையமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட தென்னை சாகு படி விவசாயிகள் சார்பில் தென்னை உற்பத்தியாளர் சங்க தொடக்க விழா நடந்தது. பங்குதந்தை ஜார்ஜ் பொன்னையா தலைமை வகித்தார். முன்னாள் ஊராட்சி தலைவர் அருள்ராஜ் முன்னிலை வகித்தார். சடையமங்கலம் ஊராட்சி தலைவி குளோறி வரவேற்றார். பத்மனாபபுரம் வேளாண்மை அலுவலர் இலக்குமணன் சிறப்புரை ஆற்றினார். விழாவின் வாயிலாக சங்கத்தலைவராக ஜாண் போஸ்கோ லிவிஸ், துணைத் தலைவராக வறுவேல், செயலாளராக ஜோஸ்பின் சுமிதா, பொருளாளராக பர்ணபாஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பத்மனாபபுரம் உதவி வேளாண்மை அலுவலர் மதிஷ்குமார் நன்றி

கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் பாசனத்திற்கு கூடுதல் தண்ணீர் திறப்பு</u>**

கோபிசெட்டிபாளையம்,தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் பாசனத்திற்கு கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டது.

<u>தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்</u>

பவானிசாகர் அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் கொடிவேரி அணைக்கு வந்து சேருகிறது. கொடிவேரி அணையில் இருந்து மதகுகள் வழியாக தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இந்த வாய்க்கால்களில் 2–ம் போக நெல் சாகுபடிக்காக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அப்போது பருவமழை தீவிரமடைந்து காணப்பட்டதால் 5 டி.எம்.சி. தண்ணீர் போதுமானது என்று நிர்ணயிக்கப்பட்டது. வாய்க்கால்களில் தண்ணீர் திறக்கப்பட்டதை தொடர்ந்து விவசாயிகள் நெல் சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர். நெல் பயிர்கள் நன்கு வளர்ச்சி அடைந்து சில நாட்களில் அறுவடை பணிகள் தொடங்கப்பட உள்ளது.

<u>1½ டி.எம்.சி. தண்ணீர்</u>

இந்தநிலையில் கடந்த சில நாட்களாக ஈரோடு மாவட்டத்தில் வெயில் அதிகமாக அடித்தது. மழை பொய்த்து போனதால் 5 டி.எம்.சி. தண்ணீர் போதுமானதாக இல்லை. இதனால் அறுவடை நிலையில் உள்ள நெல் பயிர்களை காப்பாற்ற தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில்

கூடுதலாக தண்ணீர் திறக்க வேண்டும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதைத்தொடர்ந்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் பரிந்துரையை ஏற்று தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் கூடுதலாக 1½ டி.எம்.சி. தண்ணீர் திறக்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டது. இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:–

தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் 2–ம் போக நெல் சாகுபடிக்காக திறக்கப்பட்ட 5 டி.எம்.சி. தண்ணீர் கடந்த 9–ந்தேதி வரை (நேற்று முன்தினம்) முடிவடைந்துவிட்டது. அதன்பின்னர் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழக அரசின் உத்தரவின்படி 10–ந்தேதி (நேற்று) முதல் கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. தற்போது தடப்பள்ளி வாய்க்காலில் வினாடிக்கு 400 கனஅடியும், அரக்கன்கோட்டை வாய்க்காலில் வினாடிக்கு 200 கனஅடியும் என மொத்தம் தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் வினாடிக்கு 600 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**



கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி உத்தரவின் பேரில் மாவட்ட கால்நடை பரா மரிப் புத்துறை இணை இயக் குநர் பழனிவேல், உதவி இயக்குநர் குழந்தைசாமி ஆகியோர் முன்னிலையில் கால்நடை களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் திருக் காடு துறை, கரப்பாளையம், ஆலமரத்துமேடு, முத்தனூர் முனிநாதபுரம் ஆகிய பகுதிகளில் நடை பெற்றது. முகாமை மாவட்ட கால் நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் பழனி வேல் தலைமை தாங்கி தொடங்கி வைத் தார். கோம் புப்பாளையம் ஊராட்சி தலைவர் பசுபதி, ஒன்றிய கவுன்சிலர் சுரேஷ்

ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் நொய்யல் கால்நடை மருத்துவர் தமிழர சன் தலை மையில் மருத்துவ உதவியாளர் மாலதி, மீரா, கால்நடை ஆய்வாளர் நடராஜ் மற்றும் கால்நடைத் துறையினர் கொண்ட குழு வினர் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த சுமார் 600-க்கும் மேற்பட்ட மாடுகள் மற்றும் கன்று குட்டிகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகளை போட்டனர். இதில் விவசாயிகள் பலர் தங்கள் கால்நடைகளை கொண்டு வந்து பயன் அடைந்தனர்.

## எந்திரம் மூலம் நடவு பணி: வயல்களில் வேளாண்மை துறை இயக்குனர் ஆய்வு



எந்திரம் மூலம் நடவு பணி நடந்த வயல் களில் வேளாண்மை துறை இயக்குனர்ராஜேந்திரன்ஆய்வுசெய்தார்.

உணவுபாதுகாப்புதிட்டம்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாய தொழில் நுட்ப செயல் விளக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் பங்கேற்ற வேளாண்மை துறை இயக்குனர் ராஜேந்திரன் மன்னார்குடியை அடுத்த நெடுவாக்கோட்டையில் எந்திரம் மூலம் நடவு பணி நடைபெற்ற வயல்களில் பயிர் களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நிலக்கடலைபயிர்

இதைதொடர்ந்து மேல நாகை, காரிக்கோட்டை ஆகிய கிராமங்களுக்கு சென்ற வேளாண்மை இயக்குனர் விவசாய தொகுப்பு திட்டங்கள் மூலம் பயிரிடப்பட்டுள்ள எண்ணெய் வித்து பயிர்கள், பயறு வகை பயிர்கள், நிலக் கடலை பயிர் ஆகியவற்றை பார்வையிட்டார். ஆய்வின் போது திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன், மாவட்ட வருவாய் அதிகாரி மோகன்ராஜ், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர்

மயில்வாகணன், மன்னார்குடி உதவி கலெக்டர் செல்வசுரபி ஆகியோர் உடன் இருந்தனர்.

## திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் 1,256 வாழைத்தார்கள், ரூ.1 லட்சத்து 33 ஆயிரத்துக்கு ஏலம்



திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் 1,256 வாழைத்தார்கள் ரூ.1 லட்சத்து 33 ஆயிரத்துக்கு ஏலம் விடப்பட்டது.
வாழைத்தார்கள்ஏலம்
திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் திருச்செந்துறை வாழைவணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை வாழைத்தார்கள் ஏலம் விடப்படும். அதன்படி நேற்று இந்த ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் நடைபெற்ற ஏலத்தில் 1,256 வாழைத்தார்கள் ரூ.1,33,420-க்கு ஏலம் விடப்பட்டது. ஏலம் நடைபெறும் பணியை பார்வையிட்ட மாவட்ட கலெக்டர்பழனிச்சாமிகூறியதாவது:-
கொட்டகைகள்
வாழை வணிக வளாகத்துக்கு வரும் வாழைத்தார்களை தரம் பிரித்து கிலோ கணக்கில் விற்பனை செய்தால் விவசாயிகளுக்கு கூடுதலாக வருமானம் கிடைக்கும். இதற்காக எடை போடும் எந்திரம் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்படும். வாழை வணிக வளாகத்தின் உட்புறத்தில் வாகனங்கள் வந்து செல்ல ஏதுவாக சாலை வசதிகளுக்கும், கூடுதலாக வாழைத்தார்கள் வரும்போது பாதுகாப்பாக வைப்பதற்கும் போதிய கொட்டகைகள் அமைக்க கருத்துருக்கள் அனுப்பப்படும். இவ்வாறு அவர் கூறினார்.
ஏற்றுமதிரகங்கள்
மேலும் ஏற்றுமதி செய்யக்கூடிய ரகங்களான கிரான் 9 வகையான

வாழைத்தார்களை பயிரிட இங்குள்ள விவசாயிகளை தேனி மற்றும் வத்தலகுண்டு பகுதிகளுக்கு அழைத்துச் சென்று காண்பித்து, அந்த ரகங்களை இங்கு பயிரிட்டு அதிக லாபம் பெற வழிவகை செய்ய வேண்டும் என வேளாண் வணிகம் துணை இயக்குநருக்கு கலெக்டர் உத்தரவிட்டார். அப்போது துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ஆர்.சந்திரசேகர், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆர்.சந்தானகிருஷ்ணன், உதவி வேளாண் அலுவலர்கள் ராபர்ட் ரிச்சர்ட், சாக்ரடீஸ் உள்பட பலர் உடன் இருந்தனர்.